எம்.சி.ஓ.பி எண்: 4751/2023 தேதி: 18.02.2026

மசா. : 1

பெயர் : எம். சிவக்குமார்

த/பெ. : முத்து

வயது : 49

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 14 வரை தாக்கல் செய்கிறேன். மசாஆ 3,5,6,7,8,9 ஆவணங்கள் எதிர்தரப்பு ஆட்சிபேனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தற்பொழுது தமிழ்நாடு காவல்துறையில் வேலை பார்த்து வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள மனுவில் எனக்கு வருமான இழப்பு ஏற்பட்டதாக இந்த மனுவில் கூறப்படவில்லை என்றால் சரியல்ல. நானும் என்னுடன் மற்றொரு காவலர் கண்ணன் என்பவரும் அரசுக்கு சொந்தமான இருசக்கரவாகனத்தில் காட்டாங்குளத்தூரில் பெட்ரோல் பங்க்கில் வண்டிக்கு பெட்ரோல் நிரப்பிவிட்டு புறப்பட தயராக இருந்தபோது எதிர்திசையில் ஒரு ராயல் என்பீல்டு இருசக்கரவாகனம் அதிவேகமாக வந்து எங்கள் மீது மோதியது. நாங்கள் ஓரமாக வண்டியில் நின்றுகொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டது. இந்த விபத்து குறித்து புகார் நான்தான் கொடுத்தேன். அதன் அடிப்படையில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கையில் இருசக்கரவாகனத்தை கண்ணன் ஓட்டிக்கொண்டு சென்றபோதுதான் விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கண்ணன் தான் நான் சென்ற இருசக்கரவாகனத்தை அஜாக்கிருதையாக ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. எனக்கு எலும்பு முறிவு ஏற்படவில்லை. மசாஆ 2 ல் எனக்கு சிராய்ப்பு காயங்கள், கட் இன்சூரி என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் எனக்கு வேறு காயங்கள் ஏற்பட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. மசாஆ 2 ஐ தவிர நான் சிகிச்சை பெற்றதற்கு வேறு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. இந்த விபத்தில் எனக்கு எந்தவிதமான பங்சனல் இன்சூரியஸ் ஏற்படவில்லை என்பதால் தொடர்சிகிச்சையில் இருந்ததற்கான

ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு லேசான காயங்கள் மட்டுமே ஏற்பட்டது என்றாலும் நான் முழுவதுமாக குணமடைந்துவிட்டேன் என்றாலும் எனக்கு எந்த வித குறைபாடும் இல்லை என்றால் சரியல்ல. நான் எந்தவிதமான விடுப்பும் எடுக்கவில்லை என்றாலும் அதனால்தான் நான் விடுப்பு எடுத்ததற்கான விவரங்களை தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. மசாஆ 3 ல் என் மீது மோதிய இருசக்கர புல்லட் வாகனத்தின் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மசாஆ 8 ன் படி முதல் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு விபத்து காலத்தில் செல்லதக்க ஓட்டுநர் உரிமம் இல்லை என்றாலும் அதனால் இரண்டாம் எதிர்மனுதாரருக்கு இழப்பீடு செலுத்த பொறுப்பு இல்லை என்றாலும் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகைக்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இழப்பீடு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

x

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.